யூதாவிலே தேவன் அறியப்பட்டார்



யூதாவிலே தேவன்

Thu 26 APR '07

76 சங்கீதம்

யூதாவிலே தேவன் அறியப்பட்டார்
இஸ்ரவேலில் அவர் நாமம் பெரியது
சாலேமில் கர்த்தர் கூடாரம் போட்டார்
சீயோனிலே தேவன் இடம் கொண்டார்

வானத்திலிருந்து நியாயம் தீர்க்கார்
யாக்கோபின் தேவனாலே பூமி பயந்தது
மகத்துவமுள்ளவரே பிரகாசமுள்ளவரே
பூமியின் ராஜாக்களுக்கு பயங்கரமானவரே
(யூதாவிலே)

வானத்திலிருந்து நியாயம் விசாரிப்பார்
சிறுமைப்பட்டவனை தேவன் இரட்சித்திடுவார்
மகத்துவமுள்ளவரே பிரகாசமுள்ளவரே
பிரபுக்களின் ஆவியை அடக்கிடும் பரிசுத்தரே
(யூதாவிலே)

யுத்தகளத்திலே போரை ஒழிக்கிறார்
இரதங்களும் குதிரைகளும் உறங்கி விழுந்தது
மகத்துவமுள்ளவரே பிரகாசமுள்ளவரே
அம்பையும் பட்டயத்தையும் முறித்த தேவரே
(யூதாவிலே)

கோபம் மூளும் போது முன்பாக நிற்பவன் யார்
மனுஷனின் கோபத்தை அடக்கிடும் ஆண்டவரே
மகத்துவமுள்ளவரே பிரகாசமுள்ளவரே
தைரிய நெஞ்சுள்ளவர்களை கொள்ளையாய்ப் போக வைத்தவ
(யூதாவிலே)

If an ass goes a-traveling, he will not come home a horse.

KJC-DNN